# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,716 — 1966 ඔක්තෝබර් 7 වැනි සිකුරාදා — 1966.10.7

14,716 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 7 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 271 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 272 | ஆதன விற்பனைகள் .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 273 | விதிச் செயற்குழுவின அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. | 273 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

எல். ஜீ.—ஜீ. 49/55.

### வாடி வீட்டுச் சட்டம்

(275 ம் அத்தியாயமான) வாடி வீட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், தகுந்த அதிகார சபையான தங்காலை நகர சபையால், தங்காலை வாடிவீடு சம்பந்தமாக ஆக்கப்பட்டு, அப்பிரிவின் கீழ்த் தமக்களிக்கப்பட்ட அதிகாரப்படி, உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட விதி.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு, 15.9.1966

#### விதி

தங்காலை நகரசபையால், தங்காலை வாடி வீடு சம்பந்தமாக ஆக்கப்பட்டு, 1956 ம் ஆண்டு மார்ச் மாதம் 2 ந் தேதியில் வெளியிடப்பட்ட 10,899 ஆம் இலக்கமுள்ள கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதிகள், அவ்விதிகளில் குறிக்கப்பட்டுள்ள அட்டவணைக்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணையைச் சேர்ப்பதன்மூலம் இதனால் திருத்தப்படுகின்றன :—

"அட்டவணை

தங்குதல் — ரூ. ச.

(1) வாடி வீட்டில் (ஒரு படுக்கை அறை தவிர்ந்த) வேறு ஒரு இடத்தில் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அல்லது அதன் பாகத்திற்கு ஒருவர் தங்குவதற்கு .. .. 0 25
வாடி வீட்டுத் தாபகரால், வழங்கப்படும் சாப்பாடு தவிர்ந்த வேறொரு சாப்பாட்டை வாடிவீட்டு வளவில் வைத்து உண்பதற்கு ஒவ்வொருவருக்கும் கூடுதலாகப் 10 சதம் கொடுபடுதல் வேண்டும்

(2) வாடி வீட்டில் உள்ள படுக்கை அறையை உபயோகிக்கும் ஒவ்வொருவரும்—
- (அ) ஏதாவது ஒரு நாளில், காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரைக்கும் ஒரு படுக்கை அறையை உபயோகிப்பதற்கு .. .. .. 2 00
- (ஆ) மாலை 6 மணிமுதல், மறுநாள் காலை 6 மணி வரை ஒருவர் தங்குவதற்கு .. .. 2 50
- (இ) 12 மணித்தியாலங்கட்கு மேற்பட்டும் 24 மணித்தியாலங்கட்கு உட்பட்டுமுள்ள காலத்திற்கு .. 3 00

(இக்கட்டணத்திற்கு, ஒரு படுக்கை, ஒரு சோபா அல்லது கவுச், ஒரு விரிப்பு, ஒரு மேசைவிரிப்பு, துவாய்கள், விளக்குகள் உபயோகிக்கப்படலாம்.)

#### மோட்டார் கார்களும் ஏனைய வாகனங்களும்

(1) வாடி வீட்டில் தங்கும் ஒருவர் கராச்சில் நிற்பாட்டியிருக்கும் ஒவ்வொரு மோட்டார் கார், மோட்டார் சைக்கிள் அல்லது வேறொரு வாகனத்திற்கு—

ரூ. ச.

- (அ) 1 மணித்தியாலத்திற்கு மேற்படாத காலத்திற்கு .. கட்டணம் இல்லை
- (ஆ) 1 மணித்தியாலத்திற்கு மேற்பட்டும் 6 மணித்தியாலங்கட்கு உட்பட்டுமுள்ள காலத்திற்கு .. .. 0 25
- (இ) 6 மணித்தியாலங்கட்கு மேற்பட்டும் 12 மணித்தியாலங்கட்கு உட்பட்டுமுள்ள காலத்திற்கு .. .. 0 50
- (ஈ) 12 மணித்தியாலங்கட்கு மேற்பட்டும் 24 மணித்தியாலங்கட்கு உட்பட்டுமுள்ள காலத்திற்கு .. .. 1 00

(2) வாடி வீட்டில் தங்காத ஒருவர், வாடி வீட்டிலுள்ள கராச்சில் நிற்பாட்டும், மோட்டார் கார், மோட்டார் சைக்கிள், அல்லது வேறொரு வாகனம் ஒவ்வொன்றிற்கும்—
- (அ) 1 மணித்தியாலத்திற்கு மேற்படாத காலத்திற்கு .. 1 00
- (ஆ) 1 மணித்தியாலத்திற்கு மேற்பட்டும் 6 மணித்தியாலங்கட்கு உட்பட்டுமுள்ள காலத்திற்கு .. .. 1 25
- (இ) 6 மணித்தியாலங்கட்கு மேற்பட்டும் 12 மணித்தியாலங்கட்கு உட்பட்டுமுள்ள காலத்திற்கு .. 1 50
- (ஈ) 12 மணித்தியாலங்கட்கு மேற்பட்டும் 24 மணித்தியாலங்கட்கு உட்பட்டுமுள்ள காலத்திற்கு .. .. 2 00

(3) ஏதேனுமொரு கரேச் வெறுமனேயிருக்கையில் வாடி வீட்டு வளவில் இரவு 8 மணிமுதல் மறுநாள் காலை 6 மணி வரை நிற்பாட்டப்படும் மோட்டார் கார், மோட்டார் சைக்கிள், அல்லது வேறொரு வாகனம் ஒவ்வொன்றிற்கும்—
- (அ) 2 மணித்தியாலங்கட்கு உட்பட்ட காலத்திற்கு கட்டணம் இல்லை
- (ஆ) 2 மணித்தியாலங்கட்கு மேற்பட்டும் 6 மணித்தியாலங்கட்கு உட்பட்டுமுள்ள காலத்திற்கு .. .. 0 25
- (இ) 6 மணித்தியாலங்கட்கு மேற்பட்ட காலத்திற்கு .. 0 50

#### இராச்சேவை

இரவு 11 மணிமுதல் மறுநாள் காலை 6 மணிவரைக்கும் தனியாக வரும் அல்லது கூட்டமாக வரும் ஒவ்வொரு தனி நபருக்கும் .. .. 2 00"

10–202—7.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,716

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக்கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆண்டு ஜூலை மீ 15 ந உ.

பேர்னட் த சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

எல்.டி.பி. 69/41.
உ.ஆ.தி.ஜி.ஈ. 1/1/39.

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாய மான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், உள்ளூ ராட்சி அமைச்சர், முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், கொழும்பு மாவட்டத்திலுள்ள கெகெல்லலைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபைக்கு அப்பிரிவின் கீழ் ஒரு நிலவரியை அக்கிராமப் பிரதேசத்தில் விதித்து அறவிடுதற்கு இவ்வறிவித்தல் மூலம் அதிகாரமளிக்கிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1966 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 9 ந் வெ.

10–195—7.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,716

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உள்ளூராட்சிச் சேவை

**சுருக்கெழுத்தட்டெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்குப் பதவி உறுதிப்படுத்துதலுக்கான பரீட்சை**

மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில், பின்வரும் பரீட்சார்த்தி அவரது பெயருக்கு எதிரில் காட்டப்படும் பாடத்தில் சித்தியடைந்துள்ளார் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| பெயர் | உள்ளூராட்சி மன்றம் | பாடம் |
|---|---|---|
| எம். தயாவதி .. | கொழும்பு மா. ந. ச. .. | கடிதம் எழுதுதல் |

டபிள்யு. ஏ. விஜேசிங்ஹ,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

த. பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ஆண்டு செப்டம்பர் மீ 19 ந் வெ.

10–182—7.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,716.

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

**தரம் 1, தரம் 2, தரம் 3 வேலைகளும், நீர்வேலைகளும் அத்தியட்சர்கள் ; கொழும்பு மா. ந. ச. மாநகர எந்திரியின் திணைக்களத்துப் பரி சோதகர்கள் ; கொழும்பு மா. ந. ச. நீர்வேலைகளும், வடிகா லமைப்புத் திணைக்களங்களது பரிசோதகர் ; ஏனைய உள்ளூ ராட்சி மன்றங்களிலுள்ள நீர்வேலைகள் பரிசோதகர்கள் ஆகியோருக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை**

5.8.66 இன் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமான மேற்படி பரீட்சை சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தலின் 1 வது பந்தியின் பிரகாரம், பின்வரும் பரீட்சார்த்திகள் அவர்கள் பெயர்களுக்கு எதிராகக் குறிப்பிடப் படும் பாடங்களினின்றும் தவிர்க்கப்பட்டுள்ளார்கள் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| பெயர் | பாடங்கள் |
|---|---|
| *1. ஏ. உதயரத்ன, கொழும்பு மா. ந. ச. (மாநகர எந்திரியின் திணைக்களம்) பரிசோதகர் | 1. அளவறிப் பரிமாணம் |
| *2. என். நடராஜா, கொழும்பு மா. ந. ச. (மாநகர எந்திரியின் திணைக் களம்) பரிசோதகர் | 1. திரிகோண கணிதம்.<br>2. நில அளவையும் மட்டம்பார்த் தலும் (கீழ் செய்முறை)<br>3. நில அளவையும் மட்டம்பார்த் தலும் (கீழ் சித்தாந்தம்)<br>4. நீர் விநியோகமும் வடிகால மைப்பும்<br>5. அளவறிப்பரிமாணம் |
| 3. டபிள்யூ. டி. பெரேரா, கொழும்பு மா. ந. ச. (மாநகர எந்திரியின் திணைக் களம்) பரிசோதகர் | 1. நில அளவையும் மட்டம்பார்த் தலும் (கீழ் செய்முறை)<br>2. நில அளவையும் மட்டம்பார்த் தலும், (கீழ் சித்தாந்தம்)<br>3. கட்டட நிர்மாணம் |

*பரீட்சையைப் பூர்த்தி செய்கிறார்.

டபிள்யூ. ஏ. விஜேசிங்ஹ,
செயலாளர்,
உ.ஆ.சே.அ.ச.

த.பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ஆண்டு செப்டம்பர் மீ 22 ந் வெ.

10–197—7.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,716

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

**மொழிபெயர்ப்பாளர்கள் சேவை (சிங்களம்) யின் தரம் 2 க்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சை—17.7.1966**

தரம் 2, மொழிபெயர்ப்பாளர்கள் (சிங்களம்) பதவிகளுக்கு நியமிப் பதற்குப் பின்வரும் பரீட்சார்த்திகளை உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை தயைகூர்ந்து தேர்ந்தெடுத்துள்ளது என்று பொதுத் தகவலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| பெயர் | முகவரி |
|---|---|
| 1. ஏ. பி. என். அதிகாரி .. | 202, ஸ்ரீபோதி தெரு, கம்பஹா |
| 2. கே. என். ஏ. அமரதாஸ .. | உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை அலுவலகம், கொழும்பு 1 |
| 3. எச். எம். ஜீ. பர்ணந்து .. | 12/5, சொரண்ஸ் அவினியு, கல்கிஸ்ஸ |
| 4. செல்வி ஏ. கருணாரத்ன .. | 35, பகத்தல வீதி, கொழும்பு 3 |

உடனடியாகவே நியமனங்கள் அவர்களுக்குக் கொடுப்பதற்கில்லை. வெற்றிடங்கள் வந்தாலும் வரும்பொழுதும் நியமனங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

டபிள்யூ. ஏ. விஜேசிங்ஹ,
தலைவருக்காக.

த. பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ஆண்டு செப்டம்பர் மீ 22 ந் வெ.

10–188—7.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,716

# துணைவிதிகள்

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

### பொல்பிட்டிக்கமைக் கிராமச் சபை

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயம்) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் குருநாகல் மாவட்டத்திலுள்ள பொல்பிட்டிக்கமைக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு, அப்பிரிவின் (3) ம் உட்பிரிவால் தமக்களிக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ௵ செப்டம்பர் ௴ 20 ந உ.

### வாகன, மிருகவரி பற்றிய துணைவிதி

குருநாகல் மாவட்டத்திலுள்ள பொல்பிட்டிக்கமைக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு, 1941, மே 16 ன் 8,746 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட வாகன் மிருகவரிபற்றிய துணைவிதிகள் அதன் கண்ணுள்ள அட்டவணைக்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணையைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :—

அட்டவணை

| | |
|---|---|
| ஒவ்வொரு இரட்டை மாட்டுவண்டி அல்லது பயண வண்டிக்கும் .. | .. පො: 8: ග: ස:—ගො: දෙ: ක: |
| ஒவ்வொரு ஒற்றைமாட்டு வண்டிக்கும் அல்லது பயண வண்டிக்கும் | .. පො: 8: ග: ස:—ත: ගො: ක: |
| ஒவ்வொரு சைக்கிளுக்கும் | .. පො: 8: ග: ස:—පා: පැ: |
| வண்டி, பயணவண்டி அல்லது ஜின்றிக்ஷா வண்டி தவிர்ந்த வேறெவ்வகையான வாகனம் ஒவ்வொன்றுக்கும் | .. පො: 8: ග: ස:—වා: |
| ஜின்றிக்ஷா ஒவ்வொன்றுக்கும் | .. පො: 8: ග: ස:—ජී: ට්: |
| கைவண்டி ஒவ்வொன்றுக்கும் | .. පො: 8: ග: ස:—ඇ: ක: |

தகட்டின் நிறமும், வடிவமும் தலைவரால் தீர்மானிக்கப்படும்.

10–213—7.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,716

---

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம்
## (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள், அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிக்கப்பட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்களென, (262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 66 (2) ம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1966 ம் ௵ செத்தெம்பர் ௴ 26 ந உ.

அட்டவணை

| வட்டார இலக்கம் | | அபேட்சகரின் பெயர் |
|---|---|---|
| | | **களுத்துறை மாவட்டம்** |
| | | **அதிகாரி பற்று கிராமச் சபை** |
| 10 | .. | .. பெரேரா, ஹெற்றிகே சிமியோன் |
| | | **கண்டி மாவட்டம்** |
| | | **தெல்தெனிய பட்டினச் சபை** |
| 4 | .. | யூனிஸ் லெப்பே அப்துல் ஹதான் |
| | | **மாத்தளை மாவட்டம்** |
| | | **கம்பஹாசிய பற்று கிராமச் சபை** |
| 10எ | .. | மிலிறு அலுவிஹாரே |
| | | **குருணக்கல் மாவட்டம்** |
| | | **ரம்பொடாகல்ல கிராமச் சபை** |
| 7 | .. | சிங்கள பெலகே ரணசிங்ஹ |
| | | **கேகாலை மாவட்டம்** |
| | | **அதுலுகம கிராமச் சபை** |
| 19 | .. | ரட்டகெதர ஹேரத் முதியான்சேலாகே லொகு பண்டார |
| | | **தெஹிகம்பல் கோறளே எகொடபதபற்று கிராமச் சபை** |
| 26 | .. | தலத்தானி ரல்லாகே குணரத்ன |

10–210—7.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,716

---

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம்
## (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள், அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிக்கப்பட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்களென, (262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 36 ம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1966 ம் ௵ செத்தெம்பர் ௴ 23 ந உ

அட்டவணை

| வட்டார இலக்கம் | | அபேட்சகரின் பெயர் |
|---|---|---|
| | | **களுத்துறை மாவட்டம்** |
| | | **களுத்துறை பத்த கிராமச் சபை** |
| 2 | .. | மணிமெல்துர சோமதாச பெரேரா விக்ரமரத்ன |
| | | **வவுனியா மாவட்டம்** |
| | | **புதுக்குடியிருப்பு கிராமச் சபை** |
| 5 | .. | செபஸ்தியான்பிள்ளை ஞானப்பிரகாசம் |

10–209—7.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,716

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக மைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபட வேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ராஸ் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 15 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 15 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... ... | 165 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... | 330 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்பட்டல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.7.66 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 36 00 | 49 00 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 26 00 | 31 50 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் ... ... ... | 33 50 | 41 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை சதம் | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 40 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 80 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 20 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 40 | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படாது. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1966**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | **2. 9.66** | வெள்ளி | **26. 8.66** | வெள்ளி பி.ப. | **3.30** |
| | **9. 9.66** | வெள்ளி | **2. 9.66** | வெள்ளி பி.ப. | **3.30** |
| | **16. 9.66** | வெள்ளி | **9. 9.66** | வெள்ளி பி.ப. | **3.30** |
| | **23. 9.66** | வெள்ளி | **16. 9.66** | வெள்ளி பி.ப. | **3.30** |
| | **30. 9.66** | வெள்ளி | **23. 9.66** | வெள்ளி பி.ப. | **3.30** |
| **ஒற்ரோபர்** | **7.10.66** | வெள்ளி | **30. 9.66** | வெள்ளி பி.ப. | **3.30** |
| | **14.10.66** | வெள்ளி | **7.10.66** | வெள்ளி பி.ப. | **3.30** |
| | **20.10.66** | வியாழன் | **14.10.66** | வெள்ளி பி.ப. | **3.30** |
| | **27.10.66** | வியாழன் | **20.10.66** | வியாழன் நண்பகல் | **12** |
| **நவெம்பர்** | **3.11.66** | வியாழன் | **27.10.66** | வியாழன் நண்பகல் | **12** |
| | **10.11.66** | வியாழன் | **3.11.66** | வியாழன் நண்பகல் | **12** |
| | **18.11.66** | வெள்ளி | **10.11.66** | வியாழன் நண்பகல் | **12** |
| | **25.11.66** | வெள்ளி | **18.11.66** | வெள்ளி நண்பகல் | **12** |
| **திசெம்பர்** | **2.12.66** | வெள்ளி | **24.11.66** | வியாழன் பி.ப. | **3.30** |
| | **9.12.66** | வெள்ளி | **2.12.66** | வெள்ளி பி.ப. | **3.30** |
| | **16.12.66** | வெள்ளி | **8.12.66** | வியாழன் பி.ப. | **3.30** |
| | **23.12.66** | வெள்ளி | **16.12.66** | வெள்ளி பி.ப. | **3.30** |
| | **30.12.66** | வெள்ளி | **22.12.66** | வியாழன் பி.ப. | **3.30** |

**அரசாங்க அச்சகம்,**
கொழும்பு,
**1966 ம் ஆடு யூலை மீ 15 ந உ.**

**பேர்னட் த சில்வா,**
*அரசாங்க அழுத்தகன்.*

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.